Registered as a News Paper
மக்கங்கள் 04
விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 13 | (29 - 09 - 1992) | செவ்வாய்க்கிழமை | ஓசை 224

## நீர்ப்பாசன வாய்க்காலில் குளிப்போருக்கு எச்சரிக்கை

கண்களை திறந்து கொண்டு நீர்ப்பாசன வாய்க்காலில் நீராடுபவர்களுக்கு கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ரெஜி சீமன் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார். வாய்க்கால்களில் காணப்படும் பலவகைக் கிருமிகள் கண்களில் நோய்களை ஏற்படுத்துவதாகவும் இது இரத்த அழுத்தம் நீரிழிவு ஆகிய நோய்களையும் குருட்டுத் தன்மையை ஏற்படுத்துவதற்கு காரணமாக அமைகிறது எனவும் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது முன்னால் உள்ள பொருள்களைப் பார்த்த பின்னர் உடனடியாக கண்களில் பார்வைமங்கலாக தெரிந்தால் உடனே டாக்டர் ஒருவரைச் சந்தித்து கண்களை பரிசோதித்துக் கொள்ளுமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொக்குத்தொடுவாயில் உக்கிர சண்டை;

# 10 ராணுவத்தினர் பலி; 35 பேர் காயம்

## அகோர எறிகணை வீச்சின் மத்தியில் 10 காவலரண்கள் தகர்ப்பு

( நமது நிருபர் )

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை திடீர் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உக்கிர மோதல் சுமார் ஒன்றேமுக்கால் மணிநேரம்வரையில் நீடித்தது. இம்மோதலின் போது இராணுவத்திற்குத் துணையாக கடற்படை, விமானப்படை என்பனவும் தாக்குதலில் ஈடுபட்டன. ஏனைய இராணுவ முகாம்களிலிருந்தும் புலிகளின் நிலைகளைநோக்கி எறிகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இம்மோதலில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 35 பேர் படுகாயமடைந்தனர். பத்துக் காவலரண்கள் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தன பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் ஐந்து புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 3 45மணியளவிலேயே இக்காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது பத்துக் காவலரண்கள் மீது ஒரே நேரத்தில் தொடுக்கப்பட்ட இததாக்குதல் சுமார் ஒன்றே முக்கால் மணி நேரத்திற்கு இடம் பெற்றது. இச்சண்டையின் போது, இவ் இராணுவத்தினருக்கு உதவியாக இம் முகாமிலிருந்தும், கோட்டங்கேணி இராணுவ முகாமிலிருந்தும் மோட்டோர் தாக்குதல் நடத்தியவாறும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறும் இராணுவத்தினர் வெளியேறினர். இவர்களையும் விடுதலைப் புலிகள்

வேளை மண்கிண்டி முந்திரிகைக்குளம் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து புலிகளின் நிலைகளை நோக்கிக் கடும் எறிகணை வீச்சும் நடாத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இம்மோதல் இடம் பெற்ற வேளை, சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகுகள் இரண்டில் இருந்து இப்பகுதியை நோக்கிப் பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது அத்தோடு உலங்கு வானூர்தி ஒன்றும் தொடர்ச்சியான தாக்குதலில் ஈடுபட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 5 வேங்கைகள் வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டம் கொக்குத் தொடுவாய் சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்துபேர் வீரச்சா

வருமாறு:-

கப்டன் திருமலையான் (டேவிற்) பாலகிருஸ்ணன் டேவிற் ஜேந்திரன் - மின்சார நிலைய வீதி திருமலை.

லெப்டினன்ட் தேவநேயன் (குருசாமி) மயில்வாகனம் சந்திரகுமார் - களுதாவளை, மட்டுநகர்.

2ஆம் லெப்டினன்ட் இளம்பிறை (ஞானம்) பாக்கியராசா. ரவி - வீரமாநகர் கட்டைப்பறிச்சான் மூதூர்.

2ஆம் லெப்டினன்ட் வெற்றிவேல் (றீயா) சித்திரவேல் இராமச்சந்திரன்-கல்குடா, பாசிக்குடா, மட்டுநகர்.

வீரச்சாவடைந்த இவ் ஐந்து

## தேசவிரோத குற்றம் சுமத்தப்பட்டு நெடுமாறனுக்கு பிணைமறுப்பு

[சென்னை]

தேசவிரோதக் குற்றம்சாட்டப்பட்டுக் கைது செய்து காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பி நெடுமாறனை பிணையில் விடுவிக்கத் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டது. இதே குற்றத்திற்காக காவலில் வைக்கப்பட்டிருக்கும் மற்ற மூன்று பேரையும்பிணையில் விடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

இந்த நான்கு பேரின் மீது உள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்றும், அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தல் புலன் விசாரணைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்று அரசு தரப்பு வழக்கறிஞர்கள் சுட்டிக்காட்டியதை ஏற்றுக் கொண்ட நீதிபதி புலனாய்வு ஆரம்ப கட்டத்தில் இருப்பதால் அவர்களைப் பிணையில் விடுவது சரியாகாது என்று குறிப்பிட்டார்.

## வீரச்சாவு

### வீரவேங்கை சிவா வீரவேங்கை இருபரதன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறை கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இராணுவசுற்றிவளைப்பின் போது இரண்டு விடுத

## கடற்படை தாக்குதலுக்கு பூநகரியில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

பூநகரி, நல்லூர் ஆகியபகுதிகள் மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பள்ளிக்குடாக் கடற்பரப்பில் இருந்து நேற்றுப்பிற்பகல் 2.00 மணியளவில் நடாத்தப்பட்ட இத்தாக்குதலின் போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலில் மகாதேவன் பாஸ்கரன் என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

## லெப். கேணல் சுபனுக்கு மன்னார் மக்கள் அஞ்சலி

(மன்னார்)

பூநகரி பள்ளிக்குடா சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீது கடந்த வெள்ளியன்று மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சுபன் உட்பட ஆறு வேங்கைகளினதும் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக கடந்த வெள்ளி

கள் முற்றாகமூடப்பட்டு சறுப்புக்கொடிகளைத் தொங்கவிட்டும், தோரணங்கள் கட்டியும் அஞ்சலி செலுத்தினர்.

அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் முழங்காவில் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர்செல்வி வினோதா, கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர், பூநகரி கொக்கணி அதிபர் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். மகாவித்

தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இம்மோதலில் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 35 பேர் படுகாயமடைந்தனர். பத்துக் காவலரண்கள் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தன பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் ஐந்து புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று அதிகாலை 3 45மணியளவிலேயே இக்காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளால் தாக்குதல மேற்கொள்ளப்பட்டது பத்துக் காவலரண்கள் மீது ஒரே நேரத்தில் தொடுக்கப்பட்ட இததாக்குதல் சுமார் ஒன்றே முக்கால் மணி நேரத்திற்கு இடம் பெற்றது. இச்சண்டையின் போது, இவ் இராணுவத்தினருக்கு உதவியாக இம் முகாமிலிருந்தும், கோட்டங்கேணி இராணுவ முகாமிலிருந்தும் மோட்டோர் தாக்குதல் நடத்தியவாறும், துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறும் இராணுவத்தினர் வெளியேறினர். இவர்களையும் விடுதலைப் புலிகள் எதிர் கொண்டு தாக்குதல் நடத்தியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை மண்கிண்டி முந்திரிகைக்குளம் ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து புலிகளின் நிலைகளை நோக்கிக் கடும் எறிகணை வீச்சும் நடாத்தப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இம்மோதல் இடம் பெற்ற வேளை, சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகுகள் இரண்டில் இருந்து இப்பகுதியை நோக்கிப் பலத்த பீரங்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது அத்தோடு உலங்கு வானூர்தி ஒன்றும் தொடர்ச்சியான தாக்குதலில் ஈடுபட்டிருந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# 5 வேங்கைகள் வீரச்சாவு

(மணலாறு)

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாய் சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து பேர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்

மேற்படி தாக்குதலில் வீரச்சாவடைந்தோர் விபரம் வருமாறு:-

கப்டன் திருமலையான் (டேவிற்) பாலகிருஸ்ணன் டேவிற் ஜேந்திரன் - மின்சார நிலைய வீதி திருமலை.

லெப்டினன்ட் தேவநேயன் (குருசாமி) மயில்வாகனம் சந்திரகுமார் - களுதாவளை, மட்டுநகர்.

லெப்டினன்ட் கோமகன் (கலீஸ்) பிலிப்பையா பிறேமானந்தன் - சந்தாதோட்டம்- பருத்தித்துறை

2ஆம் லெப்டினன்ட் இளம்பிறை (ஞானம்) பாக்கியராசா. ரவி - வீரமாநகர் கட்டைப்பறிச்சான் மூதூர்.

2ஆம் லெப்டினன்ட் வெற்றிவேல் (றீயா) சித்திரவேல் இராமச்சந்திரன்-கல்குடா, பாசிக்குடா, மட்டுநகர்.

வீரச்சாவடைந்த இவ் ஐந்து வேங்கைகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

(மணலாறு)

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாய் சிறிலங்கா இராணுவ காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலின்போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| ★ | ஏ. கே. எல். எம். ஜி. | — 02 |
| ★ | இதன் றம் மகசீன்கள் | — 05 |
| ★ | இதன் லிங்குகள் | — 471 |
| ★ | ரி 56 - 2 ரக துப்பாக்கிகள் | — 02 |
| ★ | ரி 56 - 1 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | ரி 56 புதிய மொடல் துப்பாக்கி | — 04 |
| ★ | இதன் மகசீன் | — 14 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 4091 |
| ★ | ஏ. கே. கோல்சர் | — 03 |
| ★ | கெல்மட் | — 03 |
| ★ | சப்பாத்து | — 2சோடி |
| ★ | தண்ணீர்கான் | — 01 |
| ★ | தண்ணீர்கான் கோல்சர் | — 01 |
| ★ | தொப்பி | — 01 |
| ★ | மழைக்கவசம் | — 07 |

## குப்பிளான் பகுதியில்மோதல் குடியிருப்புகள் மீது தாக்குதல்

குப்பிளான் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே நேற்று காலை 5-30 மணிமுதல் 6-30 மணிவரை தீவிர மோதல்கள் இடம் பெற்றன.

மோதலை அடுத்து குப்பிளான், ஈவினை, புன்னாலைக் கட்டுவன், குட்டியப்புலம் பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணைத் தாக்குதலையும் 50 கலிபர் தாக்குதல்களையும் நடாத்தினர்.

## வலிவடக்கு பகுதியில் எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமத்தின் பல பகுதிகளிலும் நேற்று சிறிலங்கா விமானப்படை விமானங்கள் நோட்டமிடடுச் சென்றதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது

காலை பத்து மணிமுதல் அவ்ரோ மற்றும் உலங்கு வானூர்திகள் நேற்று சிறிலங்கா இராணுவம் நிலை கொண்டுள்ள தெல்லிப்பளை, அளவெட்டி, மாதகல் பகுதிகளை மையமாகக் கொண்டு தாழப் பறந்து நோட்டமிட்டவண்ணமிருந்தன இதனால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ★நால்வரை காணவில்லை ★ இருவர் காயம்

# திசைமாறிச் சென்ற படகு மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

கிளாலிக் கடற்பரப்பில் திசை மாறிச் சென்ற பயணிகள் படகு ஆனையிறவு குறிஞ்சாத்தீவு இராணுவ காவலரண் அருகில்கரை சேர்ந்தது.

கரைசேர்ந்த படகு மீதும் பயணிகள் மீதும் படையிலர் நடத்திய சரமாரியான தாக்குதலினால் இரு பயணிகள் காயமடைந்துள்ளனர் சிதறியோடிய பயணிகள் நால்வரை காணவில்லை

நேற்று அதிகாலை நடைபெற்ற மேற்படி சம்பவத்தில் பி. மார்க்கண்டு (வயது 31) சி மகேந்திரன் (வயது 33) ஆகிய இருவரும் காயமடைந்துள்ளலர் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் ஆலங்கேணியில் இருந்து புறப்பட்ட இரு படகுகள் நேற்று அதிகாலை 2.00 மணியளவில் திசைமாறிச் சென்று குறிஞ்சாத்தீவு இராணுவ முகாம் காவல் அரணுககுச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டிற்கு பெண் காயம்

[யாழ்ப்பாணம்]

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் ஈவினைப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை 7-00 மணியளவில் தொடர்ச்சியான துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் ஷெல் தாக்குதலை சில மணி நேரம் நிகழ்த்தினர் இத்தாக்குதலின் போது ஒரு வயோதிபமாது துப்பாக்கிச் சூட்டினால் படுகாயமடைந்தார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பீரங்கி படகுகள் நடமாட்டம்

(குருநகர்)

குடாக் கடல் பிரதேசங்களில் சிறிலங்கா கடற்படையின் பீரங்கிப்படகுகள் நேற்று முன்தினம் இரவு அதிகரித்துக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பீரங்கிப் படகுகளின் ரோந்து அதிகரிப்பை அடுத்து மீன்பிடித்தொழிலுக்கு பாசையூர் வெளிச்சக்கட்டுக்கு அப்பால் செல்ல முடியாமல் கடற்தொழிலாளர்கள் திரும்ப நேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (21)

வில் வைக்கப்பட்டிருக்கும் மற்ற மூன்று பேரையும்பிணையில் விடுமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

இந்த நான்கு பேரின் மீது உள்ள குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை என்றும், அவர்களைப் பிணையில் செல்ல அனுமதித்தல் புலன் விசாரணைக்குக் குந்தகம் ஏற்படுத்தும் என்று அரசு தரப்பு வழக்

## வீரச்சாவு

### வீரவேங்கை இவா வீரவேங்கை இருபரதன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் அம்பிலாந்துறை கடந்த 26 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இராணுவசுற்றிவளைப்பின் போது இரண்டு விடுதலைப் புலிகள் போராளிகள் சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தனர் அத்துடன் ஓர் ஆதரவாளரும் வீரச்சாவு அடைந்தார்

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிறைவுதினத்தன்று அம்பிலாந்துறை பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த விடுதலைப் புலிகளை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மாரடைப்பால் மரணம்

(யாழ்ப்பாணம்)

பத்திரிகை விநியோகிப்பதில் ஈடுபட்ட ஒருவர் மாரடைப்பால் மரணமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை இருபாலையில் பத்திரிகை விநியோகத்தில் ஈடுபட்டிருந்தபோது இவர் மரணமடைந்துள்ளார். கொழும்புத்துறையைச் சேர்ந்த பாலசிங்கம் (வயது 45) என்பவரே மரணமடைந்தவராவார்.

(யாழ்ப்பாணம்)

பூநகரி, நல்லூர் ஆகியபகுதிகள் மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்திய எறிகணைத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பள்ளிக்குடாக் கடற்பரப்பில் இருந்து நேற்றுப்பிற்பகல் 2.00 மணியளவில் ... இத்தாக்குதலின் போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இத்தாக்குதலில் மகாதேவன் பாஸ்கரன் என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார்.

# லெப். கேணல் சுபனுக்கு மன்னார் மக்கள் அஞ்சலி

(மன்னார்)

பூநகரி பள்ளிக்குடா சிறிலங்கா இராணுவ தொடர் காவலரண்கள் மீது கடந்த வெள்ளியன்று மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் சுபன் உட்பட ஆறு வேங்கைகளினதும் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக கடந்த வெள்ளியன்று முழங்காவில் மாவீரர் கலை அரங்கில் வைக்கப்பட்டன.

இம்மாவீரர்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் தம் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருமளவில் திரண்டுவந்து அஞ்சலி செலுத்தியதுடன் வர்த்தக நிறுவனங்கள் முற்றாகமூடப்பட்டு சறுப்புக்கொடிகளைத் தொங்கவிட்டும், தோரணங்கள் கட்டியும் அஞ்சலி செலுத்தினர்.

அங்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் முழங்காவில் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர்செல்வி வினோதா, கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர், பூநகரி கொத்தணி அதிபர் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். மகாவித்தியாலய மாணவி செல்வி பொ. சிவானந்தி கவிதையால் அஞ்சலி செலுத்தினார். இத்தாக்குதலில் வீரச்சாவடைந்த முழங்காவில் பிரதேசத்தின் மாவீரர்களான லெப் அறிவுடையான். வீரவேங்கை வெடி அரசன் ஆகியோரின் புகழுடல்கள் சனிக்கிழமையன்று ஜெயபுரத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலை பிள்ளைகளுக்கான

# உணவு முத்திரைதாமதம்; அதிபர்களே காரணமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவச மதிய உணவு முத்திரை வழங்குவதில் தாமதம் ஏற்படுவது வழமையாகி வீட்டது,

மேறபடி தாமதத்திற்கு ஒவ்வொரு பாடசாலையும் உரிய காலத்தில் அதற்கான கணக்கு விபரங்களை வழங்காமையே காரணம் என தெரிய வருகின்றது.

இதற்கான அறிவுறுத்தல் யாழ் செயலக சமூக சேவைப் பகுதியினால் யாழ் கல்வித் திணைக்களத்தின் ஊடாக ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது, இருந்தும பாடசாலை அதிபர்கள் கணக்கு விபரங்களை உதவி அரச அதிபர் ஊடாக

(4ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டராசிரியர் நியமனம் பெயர்ப்பட்டியலில் குளறுபடி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் குளறுபடி நடந்துள்ளது. நியமனம் வழங்க இருப்பவர்களது பெயர்ப்பட்டியலில் பெயர் மாற்றம் செய்யப்பட்ட மேற்படி குளறுபடி நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

தொண்டர் ஆசிரியர் நியமனத்திற்காக கோட்ட ரீதியாக பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, இவ்வாறு கோட்ட ரீதியாக அனுப்பப்பட்ட பட்டியலில் இருந்தே நிரந்தர நியமனத்திற்குரிய தொண்டர் ஆசிரியர்களது பட்டியல் தயாரிக்கப்பட்டது.

வேலணைக் கோட்டம் வழங்கிய பெயர்ப்பட்டியலில் இருந்து 42 பேர் நிரந்தர நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். 42 பேர் கொண்ட மேற்படி பட்டியலுக்காக சிபார்சு செய்யப்பட்டிருந்த க வீரபாண்டி தாசன் என்பவரது பெயர் பட்டியலில் இடம்பெறவில்லை மேற்படி பட்டியலுக்காக சிபார்சு செய்யப்படாத கு ஆனந்தகலா என்பவரது பெயர் இப்பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இக்குளறுபடி நேற்றுக் கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை, பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் பட்டியலிலும் குளறுபடி நடந்திருப்பதாக ஏற்கனவே புகார் செய்யப்பட்டிருக்கிறது இக்

]4 ஆம் பக்கம் பார்க்க]

**வேரோட நீர் வேண்டும் நீர்தேங்க குளம் வேண்டும்**

16 OCT 1996

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு

வெள்ளை சிவப்பு சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/- உடன் விற்பனைக்கு உண்டு. மற்றும் வெள்ளை கறுப்பு பேட்டுக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும் தொடர்பு:- இல. 01. மத்திய சந்தை மானிப்பாய். (3272)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5070)

### பிக்குகளுக்கு ஆங்கிலப் பயிற்சி

(கொழும்பு)

பௌத்த பிக்குகளுக்காக இலவச ஆங்கில வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. பௌத்த மத தர்மத்தை வெளிநாடுகளில் பரப்புவதை இலகுவாக்கும் பொருட்டு சிறி சுமங்கல தொழிற் பயிற்சிநிலையத்தில் இந்த ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

க. பொ. த. சாதாரண வகுப்பில் சித்தியடைந்த ஐம்பது பிக்குகள் மட்டும் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருட காலத்திற்கு இந்தப் பயிற்சி அளிக்கப்படும் என்று மேலும் தெரிய வருகிறது.

### விஞ்ஞானபீட பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12ஆம் திகதி முதலாம் வருடப் பரீட்சையுடன் ஆரம்பமாகவுள்ளது.

தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகள் 1-10-92ற்கு முன் பரீட்சைக் கிளையில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

மேலதிக பரீட்சை விபரங்களுக்கு பரீட்சைக்கிளை உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொள்ளும்படி பதிவாளர் கேட்டுள்ளார். (05)

### இன்ரக்ட் கழகத்தின் சேவை

(யாழ்ப்பாணம்)

# சிறிலங்காதேயிலைக்குஎதிராக லண்டனில் விளம்பரம்

## 'கிறிஸ்டியன் எயிட்' வெளியீடு

(லண்டன்)

சிறிலங்காவின் தேயிலைத் தோட்டத் தொழில் துறைக்கு எதிராக லண்டன் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வெளியாகியுள்ளன. இந்த விளம்பரங்களை கிறிஸ்டியன் எயிட் என்ற மனித நேய அமைப்பு வெளியிட்டுள்ளது.

தேயிலைத் தோட்ட லயன்களில் தொழிலாளர் அடிமைகள் போல் நடாத்தப்படுவதாகவும், அத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போதிய சம்பளம் தரப்படுவதில்லைஎன்றும் விளம்பரங்கள் குறிப்பிட்டுக் காட்டுகின்றன. மேலும் இறக்குமதியாளர்களும், மொத்த வியாபாரிகளும் சிறிலங்காத் தேயிலையை ஒரு கிலோ 350 பவுணுக்கு விற்றும் பாவனையாளரைச் சுரண்டுவதாகவும் அந்த விளம்பரம் தெரிவிக்கின்றது.

இந்த விளம்பரங்களால் இங்கிலாந்தில் சிறிலங்காத் தேயிலை வியாபாரம் சரிந்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. இது குறித்து தோட்டத் தொழில்துறைச் செயலாளர் ஆர்.எஸ் ஜெரெட்ணா லண்டனிலுள்ள சிறிலங்கா உயர்ஸ்தானிகர் சேப்பால ஆட்டிக்கலவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போது மேற்படி விளம்பரங்களுக்கு எதிரான பிரசாரத்தை லண்டனில் சிறிலங்கா தேயிலை வியாபாரத் தொழில்துறை ஆரம்பித்துள்ளது.

கிறிஸ்டியன் எயிட் என்ற அமைப்பு பிரிட்டன், ஜரிஸ் கிறிஸ்தவத் தேவாலயங்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு அமைப்பு என்பது தெரிந்ததே.

## தாய்லாந்து பயணம்

[கொழும்பு]

தாய்லாந்தில் உள்ள இந்துக் கோவில் ஒன்றில் நடைபெறும் விழாவில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாண நாதஸ்வர, தவில்வித்துவான்கள் கொழும்பிலிருந்து வியாழன் இரவு பாங்கொக் பயணமாகி உள்ளனர்.

அளவெட்டி நாதஸ்வர வித்துவான் கலாசூரி என். கே. பத்மநாதன் அவரது உதவியாளர் ஆர். கேதீஸ்வரன், மற்றும் தவில் வித்துவான்கள் சின்னப்பழனி முருகதாஸ், தட்சணாமூர்த்தி சங்கர் ஆகியோரே பயணமாகி உள்ளனர்.

## மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டிகள்

யாழ் மாவட்ட மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டு விழாவின் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்ச்சிகள் நாளை 30ஆம் திகதி புதன் கிழமை காலை ஆரம்பமாகவுள்ளது. முதல் நிகழ்ச்சியாக அன்று காலை 6 மணிக்கு பரமேஸ்வராச் சந்தியில் துவிச்சக்கர வண்டியோட்டப் போட்டி ஆரம்பமாகவுள்ளது அதனைத் தொடர்ந்து காலை 8-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் தடகளப் போட்டிகள் ஆரம்பமாகும்.

பிற்பகல் நிகழ்ச்சியாக பல்கலைக்கழக மைதானத்தில் 3 மணிகு உதைபந்தாட்டப் போட்டியும், 5 மணிக்கு கயிறிழுத்தல் போட்டியும் நடைபெறும். இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் பாடசாலைகளுக்கான தகவல்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு தமது கோட்ட மாணவ அமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி யாழ் மாவட்ட மாணவர் அமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் கையிருப்பில் உள்ள சகல மருந்து வகைகளும் முடிவடைந்து வருவதனால் நோயாளர்கள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை- யாழ். போதனா வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு நெருக்கடி பெருமளவில் ஏற்பட்டுள்ளது.

பனடோல் காய்ச்சல் குளிகை முற்றாக முடித்துவிட்டது. இதைத் தொடர்ந்து அன்ரி பயற்றிக்ஸ் மருந்துக் குளிகைகளும் முடிந்து வருவதனால் வெளி நோயாளர் பிரிவு, சிகிச்சைப்பிரிவு, மெடிக்கல்கிளினிக் ஆகியவற்றில் வழங்கப்பட்டு வரும் மருந்துக்குளிகைகள் குறைந்த அளவில் வழங்கப்பட்டு வருகிறது.


ஈழநாத இதழின் விளம்பரப் பணிமனை
நெல்லியடி, கரவெட்டி மக்கள் நலன்கருதி

**நவீன களஞ்சியம்**

(மொடேர்ண் ஸ்ரோர்ஸ்)

நெல்லியடி பஸ்நிலையம்
கரவெட்டி.

என்னும் விலாசத்தில் திறக்கப்பட்டிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
எவ்வகை விளம்பரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.


## பிறந்த தின நினைவலைகள்



## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார திணைக்களம் - யாழ்ப்பாணம்

### மரத்தளபாடங்கள் வழங்கல்

கீழே விபரிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ( Sealed ) கேள்விப் பத்திரங்கள் என்னால் 07-10-1992 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. மாணவர் கதிரை 17'' X 18'' x 22'' (வலதுபக்கம் எழுதும் பலகையுடனும் பின்னலுடனும் முதிரை) — 100
2. பெடஸ்ரல் மேசை (இரண்டு லாட்சி) (முதிரை) $4\frac{1}{4}$' X$2\frac{1}{2}$' X$2\frac{1}{2}$' — 05
3. சார்மனை வாங்கு 6' X $1\frac{1}{4}$' X $1\frac{1}{2}$' (முதிரை) — 10
4. கதிரை கைபிடியுடன்(பொதுத்தரம்( முதிரை)— 05
5. மண்வெட்டிப்பிடி — — — 10

மேற்படி கேள்விப்பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட்டு உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல் வேண்டும் அத்துடன் அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதார திணைக்களத்திற்காக மரத்தளபாடங்கள் வழங்குவதற்கானகேள்விப்பத்திரம்'' என்று குறிக்கப்படல் வேண்டும் இப்பத்திரங்கள் என்னால் 07-10-1992 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் போது சமுகமளிக்க ... அதிகாரம் வழங்கப்


## திருத்தம்

St. Patrick's College
Jaffna

25-09-1992 (வெள்ளிக்கிழமை) ''ஈழநாதத்தில்'' வெளிவந்த விளம்பரத்தின் திருத்தம் பின்வருமாறு:-
முதலாம் ஆண்டு 01.02.87 - 31.01.88க்குள் பிறந்திருக்க வேண்டும்.

- கல்லூரி அதிபர்

(3288)


## கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ. சங்கம் கரவெட்டி

### பதவி வெற்றிடம் லொறிச் சாரதிகள் - 312/11

மேற்படி பதவிகளுக்குக் கீழ்க்காணும் தகுதிகளை உடைய சங்கப் பணியாளர்களிடம் / தகுதி வாய்ந்தவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன எமது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்,

லொறிச் சாரதிகள்:- 312 / 11

01. வயதெல்லை:- 18 - 40

02. தகைமைகள்:-
5 ஆம் தரத்திற்கு மேல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கனரக வாகனம் செலுத்தும் அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் அத்துடன் அண்மையில் லொறிச் சாரதியில் 10 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

03. பிணை:- ரூபா 5,000/-

04. சம்பளம்:- ரூபா 805/- - 1260/- / 25×7 - 35×8

05. விண்ணப்பத்துடன் உள்ளடக்கப்பட வேண்டியவை:
பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ், வாகனம் ஓட்டும் அனுமதிப் பத்திரம், நற்சான்றுப் பத்திரங்கள், வதிவுத் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள்.

விண்ணப்பங்கள் காரியாலயத்தில் பெற்றுப் பூர்த்தியாக்கி 20-10-92 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ''பொது முகாமையாளர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ சங்கம், கரவெட்டி'' என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். நீங்கள் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்
(சி-5126)

24 09.1992

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 29

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - கொம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடின்போது விழுப்புண் அடைந்து பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
(அருளானந்தம் ரவீந்திரகுமார் - வந்தாறுமூலை,

## விஞ்ஞானபீட பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் அடுத்த மாதம் 12ஆம் திகதி முதலாம் வருடப் பரீட்சையுடன் ஆரம்பமாகவுள்ளது.

தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகள் 1-10-92ற்கு முன் பரீட்சைக் கிளையில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கவும்.

மேலதிக பரீட்சை விபரங்களுக்கு பரீட்சைக்கிளை உதவிப் பதிவாளரிடம் தொடர்பு கொள்ளும்படி பதிவாளர் கேட்டுள்ளார். (05)

## இன்ரக்ட் கழகத்தின் சேவை

(யாழ்ப்பாணம்)

இளவாலை, மாதகல் பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் இன்ரக்ட் கழகத்தினர் உடுபிடவைகளை சேகரித்து மானிப்பாய் கிராம சேவகர் அலுவலகத்தின் ஊடாக அவற்றை வழங்கியுள்ளனர்.

யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய உதவியாக பால்மா பக்கட்டுகளை பங்கத் தந்தை பெற்று நோயாளர்களுக்கு நிவாரண உதவியாக வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (21)

## சம்பளம் வழங்கப்படும்

லங்கா சீமெந்து லிமிடெட் ஊழியர்களின் ஆகஸ்ட் 92, செப்டம்பர் 92 ஆகிய இரண்டு மாதங்களுக்கான இருபத்தைந்து சதவீத சம்பளக் கொடுப்பனவுகள் இன்று முதல் வழங்கப்படவுள்ளது. சுன்னாகத்தில் இயங்கும் லங்கா சீமெந்து லிமிட்டெட்டின் தற்காலிக பணிமனையில் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று உதவிப்பொதுமுகாமையாளர் அன்ரனிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

## புதியதும், பழையதும் நூல் அறிமுகவிழா

புதியதும், பழையதும் என்னும் நூலின் அறிமுக விழா இன்றுபிற்பகல் மூன்று முப்பது மணிக்கு யாழ் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் அரும்பொருளக அறையில் நடைபெறவுள்ளது. கலாநிதி சி. மௌனகுருவின் அண்மைய வெளியீடான இந்நூலின் ஆய்வுரையைபேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி சோ.கிருஷ்ணராசா, திரு. ஏ. ஜே. கனகரட்ணா, திரு. க. சிதம்பரநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.


(மொடேர்ண் ஸ்ரோர்ஸ்)

நெல்லியடி பஸ்நிலையம்
கரவெட்டி.

என்னும் விலாசத்தில் திறக்கப்பட்டிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
எவ்வகை விளம்பரமும் ஏற்றுக்கொள்ளப்படும்.


## பிறந்த தின நினைவலைகள்



### லெப்டினன்ட் வீமா (குயிலி)

[தங்கராஜா ரவிந்திராதேவி]

கருவறை வாயினிலே 29.09.1973 — காவியக் கோவிலிலே 09.07.1992

எம் அன்பான வீமாவே
நீ இங்கு இல்லை என்பது - ஒரு
கசப்பான நிஜம்!
நீ இங்கு இருககிறாய் என்பது - ஒரு
பொய்யான பிரமை!
எங்கள் ஆகாயத்தை விட்டு அபகரிக்கப்பட்ட
நட்சத்திரம் நீ
நாங்கள் ஞாபகத்தின் பக்கங்களை புரட்டிப்
பார்க்கவில்லை - ஏனெனில்
எங்கள் மனங்களில் அவை
மனனஞ் செய்யப்பட்டுள்ளன
எம்மால் அழமுடியவில்லை - ஏனெனில்
இது அழுகைக்கு அப்பாற்பட்ட சோகம்
உன் நினைவுகள் எங்கள் உணர்வுகள்

- போராளிகள்

(சி/5127)

கீழே விபரிக்கப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட ( Sealed ) கேள்விப் பத்திரங்கள் என்னால் 07-10-1992 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாணவர் கதிரை 17'' X 18'' x 22'' (வலதுபக்கம் எழுதும் பலகையுடனும் பின்னலுடனும் முதிரை) | — | 100 |
| 2. | பெடஸ்ரல் மேசை (இரண்டு லாட்சி) (முதிரை) $4\frac{1}{4}$' X $2\frac{1}{2}$' X $2\frac{1}{2}$' | — | 05 |
| 3. | சார்மனை வாங்கு 6' X $1\frac{1}{4}$' X $1\frac{1}{2}$' (முதிரை) | — | 10 |
| 4. | கதிரை கைபிடியுடன் (பொதுத்தரம் (முதிரை) | — | 05 |
| 5 | மண்வெட்டிப்பிடி — — | — | 10 |

மேற்படி கேள்விப்பத்திரங்கள் உங்களால் தயாரிக்கப்பட ஓ உறையில் இடப்பட்டு அரக்கு முத்திரை இடப்படல் வேண்டும் அத்துடன் அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ் சுகாதார திணைக்களத்திற்காக மரத்தளபாடங்கள் வழங்குவதற்கானகேள்விப்பத்திரம்'' என்று குறிக்கப்படல் வேண்டும் இப்பத்திரங்கள் என்னால் 07-10-1992 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் போது சமுகமளிக்கலாம் அல்லது எழுத்து மூலமான அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை சமுகமளிக்க ஏற்பாடு செய்யலாம். ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்விதாரர் 06-11-1992 ற்கு முன் பொருள்களை வழங்க வேண்டும். இப்பொருள்களின் மாதிரிகளைப் பார்வையிட விரும்புவோர் 30-09-1992 ஆம் திகதி காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்
சு. சே. பி. ப. பணிமனை,
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
24-09-1992

(சி/5117)

## ஆழ்மன நினைவுகள்



### திரு. செல்லையா அரியரத்தினம் அவர்கள்

(முன்னாள் இலங்கைவங்கி உத்தியோகத்தர்)

மண்ணுலகில்; 20-11-1926 — விண்ணுலகில்; 02-10-1989

இணுவையம் பதியில் உறையும் கந்தப்
பெருமானது திருவடி நீழலில் அன்னை
பரமானந்தவல்லி அம்பாளின்
அரவணைப்பில் அன்னார் ஆத்ம
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோவில் வாசல்,
இணுவில்.

-குடும்பத்தினர்

(3275)

விண்ணப்பங்கள் காரியாலயத்தில் பெற்றுப் பூர்த்தியாக்கி 20-10-92 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ ''பொதுமுகாமையாளர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ சங்கம், கரவெட்டி'' என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். நீங்கள் அனுப்பும் தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

- பொதுமுகாமையாளர்

24 09.1992

(சி-5126)

## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 29

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு - கொம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூடின்போது விழுப்புண் அடைந்து பின் சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய -

**ரவி** (அருளானந்தம் ரவீந்திரகுமார் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு திருக்கோணமலையில் சிறிலங்கா படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்

1990 ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**வேலு** (சண்முகம் சிவசாமிவேலு - பிராமணாளங்குளம், வவுனியா)

கட்டுனில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சிவதர்சன்** [சண்முகம் - வவுனியா]

கட்டுவன் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினபோது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**அனார்க்கலி, மீரா** (சுவர்ணசுந்தரி சாம்பசிவம் - சிறிமுருகன் குடியேற்றம், வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்)

**நாயகி / பவுண்** (சாந்தி சின்னராசா - கோண்டாவில வடக்கு, யாழ்.)

வவுனியா - கச்சக்கொடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் ஊர்காவற் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சைமன்**

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கிரன்** (விஜயரத்தினம் தெம்பநேசன் - பெரிய பூவரசங்குளம், வவுனியா)

**காந்தரூபன்** (நடராசா சிவநாதன் - புதுக்குளம், வவுனியா)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5125)

### சிந்தனைக்கு

ஆசை, வெறுப்பு, மனமயக்கம்
இவையே தீயதின் வேர்கள்
— கௌதம புத்தர்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 29- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## தப்பான முடிவு

"உங்களை ஒரு செழிப்பான சமவெளிக்கு அழைத்துச் செல்கிறேன். அங்கு நீங்கள் செல்வம், கீர்த்தி என்பனவற்றை அறுவடை செய்வீர்கள்" தனது இத்தாலிப் படையெடுப்பின்போது பிரெஞ்சுப் போர் வீரர்களைப் பார்த்து நெப்போலியன் இவ்வாறு கூறினார். அதாவது உள்நாட்டுச் சண்டையாலும் பஞ்சத்தாலும் நலிந்து வலுவிழந்து போயிருந்த பிரெஞ்சு இராணுவத்தினருக்கு இத்தாலியில் வெனிஸ் போன்ற சொர்க்கபுரிகளை நெப்போலியன் திறந்துவிட்டார். கொள்ளையிட்டும், சூறையாடியும் பிரான்ஸ் இராணுவம் பூரித்துப் போனது.

இதைப் போன்றதொரு சிந்தனையிலேயே 1990 லும், அதற்கு முன்னரும் சிறிலங்கா இராணுவத்தில் சேர்ந்து கொள்ளச் சிங்கள இளைஞர்கள் முண்டியடித்தனர் காலிமுகத் திடலில் கியூவில் காத்துக் கிடந்தனர். இதனைப் பார்த்த சிங்கள அரசு புலிகளை ஒழிக்கச் சிங்கங்கள் புறப்பட்டு விட்டன எனப் பெருமை பேசிக் கொண்டது.

ஆனால் அரசு எண்ணியதுபோல் புலிகளை ஒடுக்குவதற்காகச் சிங்கள இளைஞர்கள் இராணுவத்தில் சேரவில்லை. பெரும் செல்வத்தைத் தமிழரிடம் இருந்து சேர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே சேர்ந்தார்கள். அதேவேளை சிங்கள இளைஞர் தமிழரிடம் இருந்து இவ்வளவு எதிர்ப்பு வரும் என எண்ணியிருக்கவில்லை. கடந்த காலங்களில் தென்னிலங்கையில் இனக் கலவரங்களின்போது தமிழரிடம் இருந்து இலகுவாகக் கொள்ளையிட்டதுபோல், வடக்கு கிழக்கிலும் எதிர்ப்பின்றி இலகுவாகக் கொள்ளையிடலாம் என்றே கருதினர்.

ஆரம்பத்தில் இதை வலியுறுத்துமாப்போல் சம்பவங்களும் இடம்பெற்றன. வடக்கு - கிழக்கில் [illegible]மையின் நிமித்தம் வந்தவர்கள் பெரும் செல்வத்துடன் தென்னிலங்கை திரும்பினர். வடக்கு - கிழக்கில் தமிழரிடம் கொள்ளையிட்ட தங்க நகைகள் சிங்களப் பெண்களின் அலங்காரப் பொருள்கள் ஆகின. திருமணமாகாத சிங்கள இளம் பெண்கள் கூட தமிழ்ப் பெண்களின் தாலிக் கொடிகளை அணிந்து திரிந்ததாக செய்திகள் வெளிவந்தன.

இதேவேளை புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம், இரு தாலிக்கொடிகள் கழுத்தில் தொங்கிய நிலையில் கடந்த வருடம் தீவுப் பகுதியில் கரை ஒதுங்கியது அத்தோடு கடந்த வருடம் தீவுப்

# நெடுங்கேணி இந்திய ராணுவ மினி முகாம் :

# புலிகள் தாக்கி நிர்மூலமாக்கிய வரலாறு

அன்று தண்ணீர் ஊற்று ஆலடிசந்தியில் எனது குழுவினரும் நானும் வைத்த கண்ணி வெடியினை இந்திய இராணுவத்தினர் ஓர் தேசவிரோதியின் உதவியினால் கைப்பற்றி விட்டனர்.

அக் கண்ணி வெடியினை மீள கைப்பற்றும் முயற்சியாக நானும் எனது குழுவினர் மூவருமாக மொத்தம் நால்வர் தனித்து நின்று 75 இற்கும் மேற்பட்ட இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராக போரிட்டோம். பெரிய ஏவுகணைகள் மோட்டார்கள் ஜி. பி. எம் ஜிக்கள், எல். எம் ஜி கள் சகிதம் எமை எதிர்த்த இந்திய சிப்பாய்களுக்கு எதிராக நாங்களோ! எனது கையில் ஜி 3 துப்பாக்கியும் எனது தோழர்கள் இருவரிடம் ஏ கேயும் ஒருவரிடம் எஸ். எல். ஆர் உம் மாத்திரமே வைத்து போராடினோம். இறுதியில் மேலும் இந்திய இராணுவத்தினர் அப் பகுதியை நோக்கி நாலா திசைகளிலும் குவிக்கப்பட்டனர். இதனால் இரண்டு மணி நேரத் தாக்குதலின்பின் எமது தாக்குதலை இடை நிறுத்தி விட்டு அவ் இடத்தில் இருந்து பின்வாங்கினோம்.

தாக்குதலில் இருந்து பின்வாங்கிய நாங்கள் குளக்கரையிலே அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்திருந்த எமது பிரதான முகாமிற்கு சென்றோம். அங்கு நாங்கள் எதிர்பார்த்ததைவிட அமோகமான வரவேற்பு காத்திருந்தது நாங்கள் சக்கைவெடிமருந்து விட்டுவிட்டு வந்தகற்குஎமது சககுழுவினரும் அப்போதைய முல்லை மாவட்ட தளபதியான லெப். கேணல் நவமும் என்னையும் எமது குழுவினரையும் சகல விதமான முறைகளிலும், நக்கல் (நையாண்டி) செய்தும் கேலிப்பேச்சு பேசியும் வரவேற்றனர். காட்டில் (எமது வீட்டில்) நாங்கள் வாரந்தோறும் நடத்தும் கலை நிகழ்ச்சியிலும் எம்மை கேலி செய்து எமக்கு இடையில் இருந்த ஒற்றுமையையும் புரிந்துணர்வையும், தோழமையையும், சகோதர பாசத்தினையும் எவராலும் பிரிக்க முடியாதவாறு வலுப்படுத்திக் கொண்டார்கள்.

எங்களின் இவ் ஆயுத ஒப்படைப்பால் (இச்சம்பவத்தினை எல்லோரும் ஆயுத ஒப்படைப்பு என்றே கேலியாக பேசுவார்கள்) எனது குழுவினர் 15 நாட்களுக்கு எந்த விதமான தாக்குதலுக்கும் போகக் கூடாது என்று எமது தளபதியால் பணிக்கப்பட்டோம். அப்பதினைந்து நாட்களிலும் நாங்கள் முகாம் விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபட்டோம். ''வெளியில் சண்டை நடந்து கொண்டிருக்கும் போது சண்டைக்கு செல்ல விடாது மறித்து வைப்பதுதான் ஓர் வீரனிற்கு மிகப்பெரும் தண்டனை'' என்ற உண்மையை அந்த பதினைந்து நாட்களில் எமது குழுவினரும் நானும் உணர்ந்து கொண்டோம்.

இப்பதினைந்து நாட்களின் பின் எங்களுக்கு தாக்குதல் நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது.

எனது குழுவினர் தாக்குதல் நடத்துவதற்கான இடங்களை வேவு பார்ப்பதற்கு என தோழர்களை பல இடங்களுக்கும் இருவர் இருவராக பிரித்து அனுப்பி விட்டு மிகுதிப் பேரை எமது தனிமுகாமிற்கு அனுப்பி விட்டு நானும் இன்னுமோர் போராளியும் நெடுங்கேணிப்பகுதியில் இராணுவ நடமாட்டத்தை வேவு பார்க்க சென்றோம்.

அங்கு எட்டு நாட்கள் தங்கி இருந்து வேவு பார்த்து மூன்று நிலைகளில் இராணுவத்தினரை தாக்குவது என்று முடிவு எடுத்தோம்.

1) நெடுங்கேணி பிரதான முகாமிற்கு 300 மீற்றர் தொலைவில் உள்ள பாடசாலையில் அமைந்துள்ள மினி முகாமை தாக்குவது அல்லது
2) ஏழு மடுவிற்கு ரோந்து செல்லும் இராணுவ தொடரணியை இடையறுத்து தாக்குவது அல்லது.
3) நெடுங்கேணி பிரதான முகாம் ஒட்டிசுட்டான் றோட்டில் உள்ள பிரதான காவல் அரண்கள் இரண்டை தாக்குவது.

என்ற முடிவோடு எனது குழுவினரை சந்தித்தோம். அவர்களுடன் கதைத்து முடிவு எடுத்ததில் எல்லோரும் நெடுங்கேணி பாடசாலையில் அமைந்துள்ள மினி இராணுவ முகாமை தாக்குவது தான் எமக்கு பல விதத்திலும் நன்மைதரும் என்று கூறி முடிவெடுத்தோம்.

இத்தாக்குதலுக்கான வேவு நடவடிக்கையில் 8 நாட்களையும் முற்பற்றைகளிலும், கட்டடத்தின் மேற் கூரைகளிலும், நீரும் சேறும் நிறைந்த வாய்க்காலிலும், சாப்பாடு தண்ணீர் இன்றி பட்டினியாக இரவு பகல் நித்திரையும் இன்றி கழித்தோம். எந்நேரமும் இந்திய சிப்பாய்களின் வடமொழி பாஷையையும் காலிலே அணிந்துள்ள இராணுவ பாதணிகளின் ஓசையும் அந்த 8 நாட்களுக்குள் எம்முடன் நன்றாக பழகிவிட்டன. கிடைகின்ற ஒரு சில சமயங்களில் எமது ஆதரவாளர் ஆன ஒரு மூதாட்டியின் சிறு குடிசையில் கழிப்பதுண்டு அந்த 8 நாட்களும் அம் மூதாட்டி அளித்த அமிர்தத்தையே சாப்பாடாக கொண்டு எமது வேவு நடவடிக்கையை துரிதப்படுத்துவோம். எம்மால்

**நெடுங்கேணிப் பாடசாலையில் அமைந்திருந்த இந்திய இராணுவத்தின் மினி முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற் கொண்ட வெற்றிகரமான தாக்குதல் குறித்து, இத் தாக்குதலுக்கு தலைமைதாங்கிச்சென்ற மேஜர் கிண்ணி தனது அனுபவத்தை விபரித்துள்ளார். இயக்கச்சியில் 10- 07- 92 இல் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த சாள்ஸ் அன்ரனிச் சிறப்புப் படைப்பிரிவின் தளபதியான மேஜர் கிண்ணி இத் தாக்குதலில் வேவு பார்த்ததிலிருந்து தாக்குதல்வரை நேரடியாக பங்கு பற்றியவராவார்.**



மேஜர் கிண்ணி

அடக்க முடியாதவாறு பசி வாட்டினால் அம் மூதாட்டியின் சிறு குடிலின் படலை இரவு, நேரகாலம் தெரியாமல் தட்டப்படும். அம்மூதாட்டியும் எமக்காக எந்த நேரமும் எனக்குப் பிடித்த பழஞ்சோற்றையும், சம்பலையும் தயாரித்து வைத்திருப்பார். உண்ட களிப்பில் சிறிது உறங்கிவிடுவோம். பின் அம் மூதாட்டி நாம் கூறியபடி சில நிமிடங்களில் எமக்கு சக்கரையுடன் தேயிலைச்சாயத்தை கோப்பையில்கொண்டுஎழுப்பி விடுவார். பின்னர் மீண்டும் அடுத்தடுத்த இரவிலேயே அக்குடில் படலை இரகசியமாகத் தட்டப்படும். அதுவரை பச்சைத்தண்ணீரும் கிழவி தரும் கொஞ்ச மரவள்ளி பொரியலுந்தான். எமது உணவு இதனால் எமது உடல் பலவீனமடைந்து எனக்கு காய்ச்சல் வாட்டத்தொடங்கியது முகாமில் எனக்குமருத்துவம்செய்து விட்டு எமது குழுவினர் சண்டைக்குத் தயாராகிக்கொண்டு இருந்தனர்.

நானும் சகபோராளிகள்இருவருமாக எமது பிரதான முகாமிற்குச்சென்று எமது தளபதி லெப். கேணல்நவத்திடம்எமது வேவு பற்றியும், செய்யப் போகும் தாக்குதல் பற்றியும் விரிவாக எடுத்துச் சொன்னோம். அதற்கு நவம் மறுத்து விட்டார். ஏனெனில் இத்தாக்குதல் தற்கொலைப் படைத் தாக்குதலிற்கு சமனானதுஎன்றும் இதில் சிறு பிழையும் அத் தாக்குதலில் பங்குபற்றும் 15 பேரையும் எதையும் சாதிக்க விடாமல் கொன்று விடும் என்றும்எடுத்துரைத்தார். ஆனால் நானோ எனது குழுவினரோ விடாது அடம் பிடித்தோம். தண்ணீரூற்றில்நாம்பறிகொடுத்த சக்கைக்கானிற்கு பதிலடி கொடுப்போம் என்ற எமது குழுவினரின் பிடிவாதத்தால் நவம் இதற்குச் சம்மதித்தார். ஆனால் கடுமையான நிபந்தனையுடன். அவர்தானும் சண்டைக்குவருவதுதான்என்றார். ஆனால் நாங்கள் எவரும் அனுமதிக்கமாட்டோம் என்று கூறி அவரை மறிப்பதற்குள் என்னுடன் வந்த சகபோராளிகள் இருவர் அழுதே விட்டார்கள். நவமும் நாங்கள் கூறியதற்கு சம்மதித்து தான் தாக்குதல் நடத்தும் குழுவிற்கு உதவி தேவைப்படின் உதவி வழங்குவதற்காக 35 போராளிகளுடன் தயாரானார். நாங்களும் சம்மதித்தோம் ஏனெனில் இவர்கள் தங்கி இருக்கும் இடம் நாங்கள் தாக்கும் மினி முகாமிற்கு அரைமைல் தொலைவில் என்பதால் சம்மதித்தோம்.

எமது குழுவில் இருந்து தாக்குதலிற்கு செல்லும் குழுவினரை தெரிவு செய்வது என்பது பெரும் கஷ்டமான காரியம் என்பது அப்போதுதான் எனக்கும் நவத்திற்கும் தெரிய வந்தது. அனைத்து போராளிகளுமே தாங்களும் வருகின்றோம் தாங்களும் வருகின்றோம். என்று என்னுடன் சண்டை பிடித்தனர். ஆனால் நவமோ சிலரை தெரிவு செய்துவிட்டு மீதம் பேரை துண்டுகளில் பெயரை எழுதி குலுக்கல் மூலம் 15பேரை தெரிவு செய்தார். பின்னர் குலுக்கல்முறையிலேயே மீதம் 35 பேரையும் தெரிவு செய்தார். பின்னர் தாக்குதல் குழுவிற்கு தலைமை தாங்க என்னை நியமித்து தாக்குதல் பற்றிப் போராளிகளுக்கு விளக்கமளிக்கும்படி கூறினார்.

(தொடரும்)

## இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

## முடிச்சுமாறிகள், திருடர்கள்

சேர்ந்தார்கள். அதேவேளை சிங்கள இளைஞர் தமிழரிடம் இருந்து இவ்வளவு எதிர்ப்பு வரும் என எண்ணியிருக்கவில்லை. கடந்த காலங்களில் தென்னிலங்கையில் இனக் கலவரங்களின்போது தமிழரிடம் இருந்து இலகுவாகக் கொள்ளையிட்டதுபோல், வடக்கு கிழக்கிலும் எதிர்ப்பின்றி இலகுவாகக் கொள்ளையிடலாம் என்றே கருதினர்.

ஆரம்பத்தில் இதை வலியுறுத்துமாப்போல் சம்பவங்களும் இடம்பெற்றன. வடக்கு - கிழக்கில் கடமையின் நிமித்தம் வந்தவர்கள் பெரும் செல்வத்துடன் தென்னிலங்கை திரும்பினர். வடக்கு - கிழக்கில் தமிழரிடம் கொள்ளையிட்ட தங்க நகைகள் சிங்களப் பெண்களின் அலங்காரப் பொருள்கள் ஆகின. திருமணமாகாத சிங்கள இளம் பெண்கள் கூட தமிழ்ப் பெண்களின் தாலிக் கொடிகளை அணிந்து திரிந்ததாக செய்திகள் வெளி வந்தன.

இதேவேளை புலிகளின் தாக்குதலினால் கொல்லப்பட்ட கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம், இரு தாலிக்கொடிகள் கழுத்தில் தொங்கிய நிலையில் கடந்த வருடம் தீவுப் பகுதியில் கரை ஒதுங்கியது அத்தோடு கடந்த வருடம் தீவுப் பகுதியை இராணுவம் ஆக்கிரமித்த வேளையில் தீவுப்பகுதி வீடுகளில் இருந்த பொருட்களுக்கு உரிமை கோருவதற்காகத் தமது பெயர்களைப் பொறித்த 'ஸ்ரிக்கர்களை' அப்பொருள்களின் மீது இராணுவத்தினர் ஒட்டியதாகவும் தகவல்கள் தெரிவித்திருந்தன.

மேலும், வடக்கு-கிழக்குப்பகுதியில் கொள்ளையிட்ட பொருள்களை தெற்கில் விற்கச் சென்று பொலிசாரிடம் சிக்கியவர்களும் உண்டு அத்தோடு, வடக்கு- கிழக்கில் கொள்ளையிட்ட பொருள்களால் சிலர் பணக்காரர்கள் ஆகியதைப் பொறுக்க முடியாத சிங்களவர்களில் ஒரு பகுதியினர் அவர்களைப் பொலிஸில் காட்டிக் கொடுத்ததும் உண்டு

இவ்வாறாகச் செல்வம் சேர்க்கும் ஒரு வளம் கொழிக்கும் பகுதியாக தமிழ்ப்பிரதேசத்தைக் கற்பனை செய்து இராணுவத்தில் சேர்ந்த சிங்கள இளைஞர்கள் உயிரைப்பணயம் வைத்து புலிகளுக்கு எதிராகப் போரிடுமாறு பணிக்கப்படும் போது திகைத்துப் போய்விட்டனர். உயிரா? பொருளா? என்ற ரீதியில் உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் இராணுவத்தை விட்டு ஓடத்தொடங்கியுள்ளனர். அல்லது இராணுவ ஒழுக்க, கட்டுப்பாட்டு விதிகளுக்கு கட்டுப்பட மறுக்கின்றனர்.

ஆனால், இராணுவத்தை விட்டு ஓடினாலும் செல்வந்தராகும் அவர்களின் நோக்கம் மாறவில்லை. அத்தோடு இராணுவத்தில் இருந்து கிடைத்த சம்பளமும் இல்லை. இந்நிலையில் இராணுவத்தில் சேர்ந்தபோது கிடைத்த பயிற்சியும், சிலரிடம் இருந்த ஆயுதங்களும் அவர்களுக்கு உதவின. தென்னிலங்கையில் கொள்ளை, கொலை சட்டவிரோத நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவையாகப் பெருகின.

இன்று பெருகிவரும் இச்சமூக விரோத செயல்களைக்கண்டு சிங்கள அரசாங்கம் குழப்பத்தில் ஆழ்ந்து போயுள்ளது. இராணுவத்தின் ஒழுக்கம் கட்டுப்பாட்டைப்பேண இராணுவத்தளபதி கட்டளைபிறப்பித்துள்ளார். ஆனால் இது எந்தளவிற்குச் சாத்தியமானது. என்பது கேள்விக்குரியதே குறுக்கு வழியில் பொருள் தேட விளைந்த கொள்ளையர்களை, தேசியவீரர்களாக்கமுற்பட்டதன்விளைவையே இன்று சிறிலங்கா அனுபவிக்கத் தொடங்கியுள்ளது இதன் தொடர்ச்சி நீண்ட காலத்திற்கு சிறிலங்காவில் நீடிக்கும் என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமில்லை.

---

நாங்கள் சக்கைவெடிமருந்து வீட்டுவிட்டு வந்ததற்குஎமது சககுழுவினரும் அப்போதைய முல்லை மாவட்ட தளபதியான லெப். கேணல் நவமும் என்னையும் எமது குழுவினரையும் சகல விதமான முறைகளிலும், நக்கல் (நையாண்டி) செய்தும் கேலிப்பேச்சு பேசியும் வரவேற்றனர். காட்டில் (எமது வீட்டில்) நாங்கள் வாரந்தோறும் நடத்தும் கலை நிகழ்ச்சியிலும் எம்மை கேலி செய்து எமக்கு இடையில் இருந்த ஒற்றுமையையும் புரிந்துணர்வையும், தோழமையையும், சகோதர பாசத்தினையும் எவராலும் பிரிக்க முடியாதவாறு வலுப்படுத்திக் கொண்டார்கள்.

> லங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவடைந்த சாள்ஸ் அன்ரனிச் சிறப்புப் படைப்பிரிவின் தளபதியான மேஜர் கிண்ணி இத் தாக்குதலில் வேவு பார்த்ததிலிருந்து தாக்குதல்வரை நேரடியாக பங்கு பற்றியவராவார்.

பேரை எமது தனிமுகாமிற்கு அனுப்பி விட்டு நானும் இன்னும்மோர் போராளியும் நெடுங்கேணிப்பகுதியில் இராணுவ நடமாட்டத்தை வேவு பார்க்க சென்றோம்.

அங்கு எட்டு நாட்கள் தங்கி இருந்து வேவு பார்த்து மூன்று நிலைகளில் இராணுவத்தினரை தாக்குவது என்று தண்ணீர் இன்றி பட்டினியாக இரவு பகல் நித்திரையும் இன்றி கழித்தோம். எந்நேரமும் இந்திய சிப்பாய்களின் வடமொழி பாசையையும் காலிலே அணிந்துள்ள இராணுவ பாதணிகளின் ஓசையும் அந்த 8 நாட்களுக்குள் எம்முடன் நன்றாக பழகிவிட்டன. கிடைகின்ற ஒரு சில

விடுவார். பின்னர் மீண்டும் அடுத்தடுத்த இரவிலேயே அக்குடில் படலை இரகசியமாகத் தட்டப்படும். அதுவரை பச்சைத்தண்ணீரும் கிழவி தரும் கொஞ்ச மரவள்ளி பொரியலுந்தான். எமது உணவு இதனால் எமது உடல் பலவீனமடைந்து எனக்கு காய்ச்சல் வாட்டத்தொடங்கியது முகாமில் எனக்குமருத்துவம்செய்து விட்டு எமது குழுவினர் சண்டைக்குத் தயாராகிக்கொண்டு இருந்தனர்.

நானும் சகபோராளிகள்இருவருமாக எமது பிரதான முகாமிற்குச்சென்று எமது தளபதி லெப். கேணல்நவத்திடம்எமது வேவு பற்றியும், செய்யப்

தது. அனைத்து போராளிகளுமே தாங்களும் வருகின்றோம் தாங்களும் வருகின்றோம். என்று என்னுடன் சண்டை பிடித்தனர். ஆனால் நவமோ சிலரை தெரிவு செய்துவிட்டு மீதம் பேரை துண்டுகளில் பெயரை எழுதி குலுக்கல் மூலம் 15பேரை தெரிவு செய்தார். பின்னர் குலுக்கல்முறையிலேயே மீதம் 35 பேரையும் தெரிவு செய்தார். பின்னர் தாக்குதல் குழுவிற்கு தலைமை தாங்க என்னை நியமித்து தாக்குதல் பற்றிப் போராளிகளுக்கு விளக்கமளிக்கும்படி கூறினார்.

(தொடரும்)

---

# இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையே இராணுவஒப்பந்தம் கையெழுத்தாகும்

## - சரத்பவார்

(டில்லி)

இந்தியாவுக்கும், ரஷ்யாவுக்குமிடையே விரிவுபடுத்தப்பட்ட இராணுவ உடன்படிக்கை ஒன்று எதிர்வரும் ஜனவரியில் கையெழுத்திடப்படலாம் என்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார்புதுடில்லியில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் ரஷ்யாவுக்கான ஒருவார கால உத்தியோக பூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்துப் பேசினார். அப்போது ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் பவல் கிரேசன் முன்வைத்த விரிவுபடுத்தப்பட்ட இராணுவ உடன்படிக்கை தொடர்பாக பிரதமரிடம் விளக்கிக் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சரத்பவார் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சரால் முன்வைக்கப்பட்ட உத்தேச ஒப்பந்தம் தற்போது இந்திய அதிகாரிகள் மட்டத்தில் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், எதிர்வரும் ஜனவரியில் ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சின் புதுடில்லி வருவதற்கு முன்னர் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும், இதன் அடிப்படையில் ரஷ்ய ஜனாதிபதி யெல்ட்சினுக்கும், இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கும் இடையில் இராணுவ ஒப்பந்தம் ஒன்று கையெழுத்தாகும் என்று எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

# நீலகிரி மாவட்டத்தில் பத்து பொலிசார் கைது

(சென்னை)

நீலகிரி மாவட்டம் கூடலூரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வன்முறைச் சம்பவத்தை அடுத்து அதில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் ஒரு பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் மற்றும் பத்து பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர்

இந்தச் சம்பவத்தில் சேரன் போக்குவரத்துக் கழக பஸ்கள் பலவும் இரண்டு ஓட்டோக்களும் சேதப்படுத்தபட்டது

தமிழ் நாடு சிறப்புப் பொலிஸ் படையைச் சேர்ந்த பொலிஸ் ஒருவர் தெருவில் சென்று கொண்டிருந்த பெண்களைக் கேலி செய்ததாகவும், அதனை அடுத்துப் பொது மக்கள் அவரைத் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது பிறகு அந்தப் பொலிஸ் தன்னுடன் வேலை பார்க்கும் பத்துப் பொலிசாரை அழைத்து வந்து வன்முறைச் செயலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தோடு தொடர்புபட்ட பொலிசார் கடமைபுரியும் 7 - வது சிறப்புப் பொலிஸ் படைப் பிரிவு முழுவதும் மாற்றப்பட்டுள்ளது.

ஆந்திராவில்

# எல்லை பாதுகாப்புப் படை நக்சலைட்டுகளுடன் மோதல்

## 2 மணிநேர சண்டையில் 11பேர் பலி

(டில்லி)

ஆந்திரப் பிரதேசத்தின் கரீம் நகர் மாவட்டத்தில், ரெட்டிப்பள்ளி கிராமத்தில் எல்லைப் பாதுகாப்பு படையினருக்கும் நக்சலைட்டுகளுக்குமிடையே கடந்த சனியன்று பெரியதொரு சண்டை இடம் பெற்றுள்ளது. இச்சண்டையில் எல்லைப் பாதுகாப்புப் படையினரைச் சேர்ந்த இருவரும், நக்சலைட்டுக்கள் ஒன்பது பேரும் கொல்லப்பட்டுள்ளனர். இச் சண்டை இருமணி நேரத்துக்கும் மேலாக தொடர்ந்து நீடித்துள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் இருக்கும் கன்னாதிட்டிக் குளம், ஆரியகுளம், புல்லுக்குளம் ஆகியனவற்றை ஆழமாக்கிப் புனரமைக்கும் வேலைகளை யாழ்ப்பாண மாநகர சபை மேற்கொண்டுள்ளது. இப்புனரமைப்பு வேலைகள் பெரும்பாலும் இருவாரகாலத்தினுள் பூர்த்தி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(42)

---

கட்டுநாயக்கா விமான நிலையத்தில்

# முடிச்சுமாறிகள், திருடர்கள் பெருமளவில் அதிகரிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் முடிச்சுமாறிகளும், திருடர்களும் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது வெளிநாடுகளிலிருந்து வந்திறங்கும் உள்நாட்டுப் பயணிகளிடமே திருடர்களும் முடிச்சுமாறிகளும் தமது கைவரிசையைக் காட்டுகிறார்கள் பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வரும் இலங்கையர்களே கட்டுநாயக்கா விமான நிலையத்தில் தமதுபொருள்களைப்பறிகொடுக்கிறார்கள் என்று கூறப்படுகிறது மத்திய கிழக்கில் இருந்து நாடு திரும்பும் தமது உறவினர்களை வரவேற்க கிராமப்புறங்களில் இருந்து வருபவர்களும் ஏமாற்றப்படுகிறார்கள் 40 ரூபா கொடுத்து பார்வையாளர் அனுமதிச்சீட்டுப் பெற்று இதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தங்கியிருப்பவர்களும் தமது பொருள்களையும் பணத்தையும் இழந்துள்ளதாகவும் பொலிஸில் புகார்களை தெரிவித்துள்ளார்கள் விமானப்போக்குவரத்துச் சேவைகளும் உரிய பாதுகாப்பை வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது விமான நிலையத் திருட்டுச்சம்பந்தமான செய்திகள் சிங்கள மற்றும் தமிழ் பத்திரிகைகளில் வெளிவருவதால் இச் சம்பவங்கள் பற்றித் தமக்கொன்றும் தெரியாது என்று உயர் அதிகாரிகள் மறுக்கிறார்கள்.

மேலும் வாடகைக் கார்க்காரரின் தொல்லையும் அதிகமென்று தெரிவிக்கப்படுகிறது விமான நிலையத்திலிருந்து சுமார் 15 மைல் தூரம் போக 850 ரூபா வரை கேட்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னாரில்

# விஸ்வ இந்து பரிஷத்திற்கு காணி ஒதுக்கக் கூடாது

## — சுந்தரமூர்த்தி அபூபக்கர்

மன்னாரில் 'விஸ்வ இந்து பரிஷத்' என்ற இயக்கம் இயங்குகின்றது இந்த இயக்க உறுப்பினர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வென மன்னார் தலைமன்னார் வீதி இரண்டாம் கட்டையில் 100 ஏக்கர் காணி பெற்றுக்கொள்ள எடுக்கப்படும் நடவடிக்கையை அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு வன்னி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம். பி. சுந்தரமூர்த்தி அபூபக்கர் பாராளுமன்றத்தில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஓய்வு பெற்ற கணக்காளர் நடராசா என்பவர் இவ்விஸ்வ இந்து பரிஷத்தின் தலைவர் எனவும், இவ்அமைப்பின் கூட்டங்கள் மன்னார் டி. எம். ஓ. கட்டடத்தில் நடைபெறுவதாகவும் தெரிவித்தார்.

# தபால் மோசடி நால்வர் கைது

கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் வெளிநாட்டுத் தபால்கள் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக தபால் திணைக்கள ஊழியர்கள் சிலர் சி. ஐ. டி. பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

ஈழநாதம்

# நான் இருக்கும் வரை கட்சியை பிளக்க முடியாது

**- ஜெயலலிதா**

[சென்னை]

அ.தி மு.க. வை பிளப்பது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல எனது தலைமையின்கீழ் கட்சியின் எம்.எல் ஏக்கள் அனைவரும் ஒற்றுமையாகவே உள்ளனர். எனவே அனைவருக்கும் திட்டவட்டமாக சொல்லிக் கொள்வது என்னவெனில் நானாக அரசியல் வேண்டாமென்று விட்டுவிலகினாலொழிய இந்த ஆட்சியை யாராலும் கவிழ்க்க முடியாது. இந்த ஆட்சியைப் பிளப்பது, கவிழ்ப்பது இரண்டுமே நான் இருக்கும்வரை யாராலும் முடியாது என முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

அ. தி. மு. க. பலமிழந்து இருக்கிறதா இல்லையா என்பது அடுத்த தேர்தலில் தெரியும். அடுத்த தேர்தல் வரட்டும் இந்தக் கட்சிகளுக்கெல்லாம் எந்தளவிற்கு வலிமை இருக்கிறது என்பது தெரிந்துவிடும். தமிழ் நாட்டு மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்ற ஒரே கட்சி அ தி.மு.க. தான் இங்கு விரக்தி அடைந்த சில அரசியல் வாதிகளின் ஆசைக் கனவுகள் பலிக்காது.

## எல்லை தாண்டுவோர் மீது கடும் நடவடிக்கை

### தமிழ் நாடு அரசு மீனவருக்கு எச்சரிக்கை

(சென்னை)

தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது இந்தியக் கடல் எல்லையை மீறிச் செல்லக்கூடாது என்று மாநில அரசு எச்சரித்துள்ளது.

எல்லையைத் தாண்டும் மீனவர்கள் முதல்முறை எச்சரிக்கப்படுவார்கள் என்றும், இதே தவறை மீண்டும் செய்தால் அவர்களது மீன்பிடிக்கும் உரிமை ரத்துச் செய்யப்படும் என்றும், மீன்பிடிப்படகு பறிமுதல் செய்யப்படும் என்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜனார்த்தன் தெரிவித்திருக்கிறார்.


யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

**மலிவு விலையில் மிகச்சிறந்த இயற்கைப் பசளை விற்பனை**

விவசாயத்திற்கு மிகப் பொருத்தமானதாகக் கருதப்படும் வண்டல் (குளத்துத் தூர்) டிராக்டர் லோட் ஒன்று (3/4 கியூப்) ரூபா. 125/- வீதம் விற்பனை செய்யப்படுகின்றது

கொள்வனவு செய்ய விரும்புவோர் யாழ் மாநகர சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கொடுப்பனவைச் செலுத்தி தேவையான அளவு வண்டலை கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 28-09-1992

(சி-5132)



**3-வது பிறந்தநாள் வாழ்த்து**

**★ செல்வி ஜெயவதனி ★**

இல 65, ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் பங்கஜவதனி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெயவதனி 26-09-92 சனிக்கிழமை தமது 3 ஆவது பிறந்த நாளை மிகக் குதூகலமாகக் கொண்டாடினார் இவரை ஸ்கந்தபுரத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணைமார், சின்னமாமா, மாமி, மச்சாள், சுவிஸ்சில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சான், மச்சாள், சித்தப்பா, அன்றா கபில்த் தம்பி. யாழ்ப்


## நினைவஞ்சலிக் கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சிக் கோட்டத்தில் அச்சுவேலி உள்ளடங்கிய கரவெட்டி வட்டத்தில் இதுவரை காலமும் புரட்டாதி மாதத்தில் வீரச்சாவெய்திய 17 மாவீரர்களுக்கான நினைவஞ்சலிக் கூட்டம் நாளை இரவு 7.30 மணிக்கு கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை மைதானத்தில் கரவெட்டி வட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சா. மணிவண்ணன் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவின்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் நினைவுரை வழங்குவர். கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(82)

## அதிபர்கள் சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்புக் கோட்டத்திற்குட்பட்ட கொத்தணி அதிபர்கள் தத்தமது பாடசாலைகளில் உள்ள ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கான வெற்றிட விபரங்களுடன் இன்று காலை 9-00 மணிக்கு கோட்ட அலுவலகத்திற்குசமுகமளிக்குமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. மகேசவேலு அறிவித்துள்ளார்.

(ச)

## இலக்கிய கருத்துரை

(குருநகர்)

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவை யாழ் பிரதான வீதி மன்றக் கலையரங்கில் நாளை மாலை 5மணிக்குக்கூடுமென அறிவிக்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் இலக்கியக்கருத்துரையை திரு திருக்கேதீஸ்வரநாதன் வழங்குவார். திரு. அ. ஜே. அன்ட்ர்சன் தலைமை தாங்குவார்.

(21)

## வலிவடக்கு

சுன்னாகம் சந்தைப் பகுதியில் நின்ற மக்கள் பீதியடைந்து பாதுகாப்பிடங்களை தேடி ஓடினர்,

இதேவேளை மாலை 2 மணியளவில் சுன்னாகம், ஏழாலை. மாதகல், அளவெட்டிப் பகுதிகளில் உலங்குவானூர்தி வட்டமிட பலாலியில் நிலைகொண்டிருந்த இராணுவம் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத்

# பாட்டாளி மக்கள்கட்சி மீது தடை; மத்திய அரசு பரிசீலிக்கும்

**-சவான்**

(சென்னை)

பாட்டாளி மக்கள் கட்சியை தடை செய் வேண்டும் என்ற தமிழக முதல்வரின் கோரிக்கையை மத்திய அரசு பரிசீலனை செய்யும் என்று மத்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி சவான் கூறியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில் விடுதலைப் புலிகளை தடைசெய்ய பயன்படுத்திய சட்ட விதிகள் பரிசீலிக்கப்படுவதாகவும், அதன் பின்னர் தமிழக அரசின் வேண்டுகோள் பரிசீலனைக்கு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் நாளை நியமனக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நாளை நியமனம் வழங்கப்பட உள்ளது

யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் மாலை 1. 30 மணியளவில் நடைபெற இருக்கும் வைபவமொன்றில் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட உள்ளது கோட்ட ரீதியாக உள்ள பின்வரும் சுட்டிலக்கங்களையுடையவர்களுக்கே இவ் நியமனம்வழங்கப்படஉள்ளது

சாவகச்சேரி;-

PET/ C/ 01, 02, 03, 05. 06,
,, 08. 09, 10. 11. 12,
,, 13, 14, 16, 17, 19,
,, 21, 27, 28, 29, 30,
,, 31, 32, 35, 36, 37,
,, 39, 44, 47, 49, 5',
,, 52. 53, 54, 56, 58,
,, 62. 63, 64, 65, 66,
,, 67, 69, 74. 76, 77,
,, 78. 79. 81, 82, 83,
,, 84, 85, 88, 89. 93,
,, 96 97 98. 102,108,
,, 110. 113, 121. 123,
,, 125, 127, 128, 130,
,, 132, 133 134, 136,
,, 138. J/167)

யாழ்ப்பாணம்:-

PET /J/ 02. 04 06, 07, 08,
,, 10, 11, 12. 13. 14,
,, 15, 16, 17, 18, 20,
,, 21. 22, 23, 24, 25,
,, 26, 27, 28, 29, 30,
,, 31. 32, 33, 36, 40,
,, 43, 46, 48, 49, 51.
,, 52, 54, 55, 56, 57,
,, 59. 60, 61, 62,
,, 64. 67, 68. 69, 73,
,, 75. 77. 78, 79. 80,
,, 81, 83, 84, 85, 86,
,, 87, 89, 90, 91, 92,
,, 93, 95, 97,101,105,
,, 106, 107, 110, 112,
,, 117, 118 120. 123,
,, 126. 127, 130. 131,
,, 132. 134, 137. 142,
,, 143, 148 149. 150,
,, 151, 152 155 158,
,, 160, 162, 163. 164,
,, 166, 169, 171. 172,
,, 173, 174, 175. 177,
,, 178 179, 180, 181,
,, 47, 165, 72, 108.

பருத்தித்துறை:-

PET /P/ 01, 03, 04, 07, 08,
,, 09. 12, 13. 16. 18,
,, 19. 21 22 23,
,, 25, 26, 27, 28. 29,
,, 30, 33, 36, 40, 47,
,, 48, 51, 52, 54 55,
,, 61. 63, 64, 65, 66,
,, 67, 68 69, 71, 82,
,, 83, 84. 85, 86. 87,
,, 88, 90, 91, 93, 98,
,, 99.

வேலணை;-

PET/V/ 03, 07, 09, 14, 17.

பண்டத்தரிப்பு:-

PET/ P 01. 02, 03. 06, 07,
,, 10, 11. 12, 13, 14,
,, 15, 17, 18, 19. 22,

## சுகாதார கண்காட்சி நாளை ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

சுகாதார கண்காட்சி ஒன்று நாளை முதல் பத்தாம் திகதிவரை நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் சுகாதார சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்திச் சுகாதார அறிவை ஊட்டும் நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இக் கண்காட்சி காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணி வரை நீடிக்கும்.

தற்போது வட மாகாண புற்றுநோய்த் தடுப்பு சங்கத்தின் பணிமனையாக இயங்கும் டாக்டர் பிலிப்ஸ் அவர்களின் பிரதான வீதியிலிருந்த மருத்துவ மனையில் நடைபெறவிருக்கும் இக்கண்காட்சியில் புற்றுநோய், தொழுநோய், எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள், மலேரியா, போஷாக்கு, சுற்றாடல் சுகாதாரம், பாடசாலை சுகாதாரம் என்பன தொடர்பாக விளக்கப் படங்கள் இடம்பெறுவதுடன் விளக்கவுரைகளும் நடைபெற உள்ளன. வட மாகாண புற்று நோய் தடுப்பு சங்கமும், யாழ் மாநகர சபையின் சுகாதாரப் பகுதியும் இணைந்து இக் கண்காட்சியை நடாத்தவுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே

## கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்டமட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்றைய போட்டிகளின் விபரம்;

மருதனாமடம்கல்விக்கோட்

மைதானத்தில் பிற்பகல் 3.15 மணிக்கு 17 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் யாழ். மத்திய கல்லூரி, பிற்பகல் 4.30 மணிக்கு 17வயதுப்பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

லெப்.

மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது இதன் பின் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் முழங்காவில் பிரதேசப் பொறுப்பாளர் திரு. பா சௌந்தர் ஜெயபுரத்தொண்டர் திரு இராசரத்தினம் தங்கராஜா ஆகியோர் அஞ்சலி உரை ஆற்றினர். இதன்பின் இவ்விரு மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாகஎடுத்து வரப்பட்டு முழங்காவில் மாவீரர் கலை அரங்கில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது அந்நேரடு பள்ளிக்குடாவில் சிறிலங்கா இராணுவத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட பெருந்தொகையான ஆயுதங்களும் இராணுவத் தளபாடங்களும் மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டது. இதன்பின் நூற்றுக்கணக்கான போராளிகளும் பொதுமக்களும் அணிவகுத்துச்செல்ல முழங்காவில் மாணவியரின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு முழு இராணுவமரியாதைகளுடன் முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

திசைமாறிச்

சமீபமாக கரை ஒதுங்கியது. இக்கரையே கிளாலிக்கரையாக இருக்கவேண்டும் என்று சந்தேகித்த பயணிகளில் ஆறு பேர் படகில் இருந்து இறங்கி சிறிதுதூரம் சென்று அந்த மறைவிடத்தில்நின்றவர்களை "அண்ணே", "அண்ணே" என்று கூப்பிட்டதுதான் தாமதம் படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதனால் பயணிகள் சிதறி ஓடினர். ஓடியவர்களில் இருவர் மட்டும் காயங்களுடன் மீண்டும் படகில் ஏறிக்கொண்டனர். மிகுதி நான்கு பேரையும் கா[illegible] வில்லை. படகிலிருந்த ய[illegible] பத்துப்பேருடன் இவர்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு ஒரு படகு தப்பிவந்துள்ளது. பொருள்களுடன் வந்த படகு ஒன்றும் கடலில் கைவிடப்பட்டுள்ளது. இப்படகின் ஓட்டுனர் தப்பிய படகில் ஏறிக்கொண்டதால் இவர் தப்ப முடிந்தது.

காணாமல்போன நான்கு பேர் படையினரது தாக்குதலினால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது

அலுவலகத்தில் உரிய கொடுப்பனவைச் செலுத்தி தேவையான அளவு வண்டலை கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 28-09-1992

(சி-5132)

## 3-வது பிறந்தநாள் வாழ்த்து
## ★ செல்வி ஜெயவதனி ★

இல 65, ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் பங்சஜவதனி தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெயவதனி 26-09-92 சனிக்கிழமை தமது 3 ஆவது பிறந்த நாளை மிகக் குதூகலமாகக் கொண்டாடினார் இவரை ஸ்கந்தபுரத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, அண்ணைமார், சின்னமாமா, மாமி, மச்சாள், சுவிஸ்சில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சான், மச்சாள், சித்தப்பா, அன்றாகபில்த் தம்பி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தாத்தா, அம்மம்மா, ஆனந்திமதி அன்ரி, பாஸ்மாமா, ஆசைத்தாத்தா, ஆசைக்குஞ்சையா குடும்பத்தினர், மாமா, மாமி, மச்சாள்மார், ஜேர்மனியில் வசிக்கும் பெரியமாமா, மாமி, மச்சாள்மார், தம்பி மாமா, ஆசைமாமா, சின்னன்ரி, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.


இல. 65, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

கே. ஜெயக்குமார்

(சி/5130)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 – 10 – 1945



உதிர்வு 05 – 10 – 1986

### திருமதி ஆர். சரோஜா
திதி:- 29. 09. 1992

அன்பாலும் பண்பாலும் எம்மை நெறிப்படுத்தி
ஒளிமயமான வாழ்விற்கு வழிப்படுத்தி
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
சென்ற எம் இதய சொரூபமே நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்களின்
இனிய நினைவுடனே வாழ்ந்து தங்களின்
எதிர்கால கனவுகளை நனவாக்குவோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும்
அன்பு பிள்ளைகள், மருமக்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

புதிய செங்குந்தா வீதி,
298, திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (3292)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம்29 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவை யாழ் பிரதான வீதி மன்றக் கலையரங்கில் நாளை மாலை 5 மணிக்குக்கூடுமென அறிவிக்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் இலக்கியக்கருத்துரையை திரு திருக்கேதீஸ்வரநாதன் வழங்குவார். திரு. அ. ஜே. அன்டர்சன் தலைமை தாங்குவார். (21)

### வலிவடக்கு

சுன்னாகம் சந்தைப் பகுதியில் நின்ற மக்கள் பீதியடைந்து பாதுகாப்பிடங்களை தேடி ஓடினர்,

இதேவேளை மாலை 2 மணியளவில் சுன்னாகம், ஏழாலை, மாதகல், அளவெட்டிப் பகுதிகளில் உலங்குவானூர்தி வட்டமிட பலாலியில் நிலைகொண்டிருந்த இராணுவம் குடியிருப்புகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. ]ச, 9. 11]


UNIVERSITY OF JAFFNA
TENDER NOTICE

Tendersare invited for the following fromcontractors registered for Civil Engineering / Water supply works with University of Jaffna or ICTAD.
"Sinking tube wells and installation of Hand pumps at Hostels".
Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 30-09-1992-05-10-1992 during working hours on producing a receipt from Bursar, University of Jaffna for the following:

Non-refundable deposit —Rs. 250/-
Refundable deposit — Rs. 2000/-

Perfected tenders should be sent to reach the Registrar, University of Jaffna before 10-00 a. m on 15-10-1992.
Tender Board, University of Jaffna reserves the right to reject any tender.
Registrar
University of Jaffna,
Thirunelvely
Jaffna.

[சி-5129]


கத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் இக் கண்காட்சி காலை ஒன்பது மணி முதல் மாலை ஐந்து மணி வரை நீடிக்கும்.

தற்போது வட மாகாண புற்றுநோய்த் தடுப்பு சங்கத்தின் பணிமனையாக இயங்கும் டாக்டர் பிலிப்ஸ் அவர்களின் தாரம் என்பன தொடர்பாக விளக்கப் படங்கள் இடம் பெறுவதுடன் விளக்கவுரைகளும் நடைபெற உள்ளன. வட மாகாண புற்று நோய் தடுப்பு சங்கமும், யாழ் மாநகர சபையின் சுகாதாரப் பகுதியும் இணைந்து இக் கண்காட்சியை நடாத்தவுள்ளன.

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே

# கோட்ட மட்டத்திலான இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையேயான கோட்டமட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இன்றைய போட்டிகளின் விபரம்;

மருதனாமடம்கல்விக்கோட்டத்தில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர்அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம், பிற்பகல் 4 10 மணிக்கு 19 வயது பிரிவில் ஸ்கந்தவரோதயா கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாசாலை, உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு17 வயதுப் பீ பிரிவில் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை எதிர் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை, பிற்பகல் 4.10 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் ஸ்கந்தவரோதயா கல்லூரி எதிர் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்.

யாழ்ப்பாணக் கல்விக்கோட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3.15 மணிக்கு 17 வயதுப் பிரிவில் புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் யாழ். மத்திய கல்லூரி, பிற்பகல் 4.30 மணிக்கு 17வயதுப்பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்.

வடமராட்சிக் கல்விக்கோட்டத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மாலை 3 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் எதிர் ஹாட்லிக்கல்லூரி 4.15 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் வல்வை இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு 17 வயது ஏ பிரிவில் விக்கினேஸ்வராக் கல்லூரி எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், பிற்பகல் 4.15 மணிக்கு 17 வயது பீ பிரிவில் புற்றளை மகா வித்தியாலயம் எதிர் சிறீ தாரதா வித்தியாலயம்.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப்பிரிவில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் பிறபகல் 3மணிக்கு 17 வயதுப் பிரிவில் நடேஸ்வராக் கல்லூரி எதிர் என்றியரசர் கல்லூரி, பிற்பகல் 4 மணிக்கு 17 வயதுப் பிரிவில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் அராலி இந்துக் கல்லூரி. 5 மணிக்கு 19 வயதுப் பிரிவில் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி எதிர் மகஜனாக் கல்லூரி

### துப்பாக்கிச்

ஈவினையைச் சேர்ந்த ஆர். ஞானம்மா (72 வயது) என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கென அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும்இத்தாக்குதலினால் பலவீடுகளும் சேதமடைந்ததாக தெரியவருகின்றது. (பா), (க)

### கொக்குத்

றன.

இத்தாக்குதல் பற்றி சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில் இராணுவ காவலரண்களை உடைத்துக் கொண்டு புலிகள் முகாமிற்குள் புகுந்ததாகவும், 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 35 பேர் காயமடைந்ததாகவும் தெரிவித்தது. காயமடைந்தவர்களில் 12 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதால் கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உணவு

சமூக சேவைகள் காரியாலயத்தில் உரிய காலத்தில் சமர்ப்பிப்பதாக இல்லை என தெரிவிக்கப்படுகிறது. (பா)

### தொண்டர்

கோட்டத்திலும் இவ்வாறு நிரந்தர நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் சிபார்சு செய்யப்படாத இருவரது பெயர்கள்சேர்க்கப்பட்டிருக்கின்றன மேற்படி குளறுபடிகளுக்கு யார் சூத்திரதாரி என்று கண்டறிவதில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. (பா, க)

,, 166, 169, 171, 172,
,, 173, 174, 175, 177,
,, 178 179, 180, 181,
,, 47, 165, 72, 108.

பருத்தித்துறை:-
PET/P/ 01, 03, 04, 07, 08,
,, 09. 12, 13. 16. 18,
,, 19. 21 22 23,
,, 25, 26, 27, 28. 29,
,, 30, 33, 36, 40, 47,
,, 48, 51, 52, 54 55,
,, 61. 63, 64, 65, 66,
,, 67, 68 69, 71, 82,
,, 83, 84, 85, 86, 87,
,, 88, 90, 91, 93, 98,
,, 99.

வேலணை;-
PET/V/ 03, 07, 09, 14, 17.

பண்டத்தரிப்பு:-
PET/ P 01. 02. 03. 06, 07,
,, 10, 11, 12, 13, 14,
,, 15, 17, 18, 19. 22,
,, 26, 30, 32, 33, 34,
,, 35, 36, 39, 40, 43,
,, 44. 46, 49, 50, 53,
,, 56, 58, 59, 60. 61,
,, 62, 63, 64 65. 66,
,, 68, 70, 71. 72, 74,
,, 75, 76 77, 79, 81,
,, 82 83, 86, 95, 98,
,, 99, 100, 104, 106,
,, 107, 109, 110, 111,
,, 113, 114, 115, 117.
,, 119, 120, 121, 123,
,, 125, 128, 129, 130,
,, 132, 133.

மருதனாமடம்:-
PET/M/ 01, 04, 05, 09. 12,
,, 14, 16, 18, 19, 20 22,
,, 30, 33. 35, 38, 40,
,, 42, 46, 47, 50. 51,
,, 52. 53 54 56 57 59
,, 61, 71 74 77 79, 80
,, 85. 86. 87, 88, 92,
,, 100, 104 107, 111,
,, 116, 118. 119 123.
,, 124, 125, 127. 128,
,, 129 130, 131, 133,
,, 135, 137, 138, 81.

சிறிதுதூரம் சென்று அந்த மறைவிடத்தில்நின்றவர்களை "அண்ணே", "அண்ணே" என்று கூப்பிட்டதுதான் தாமதம் படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதனால் பயணிகள் சிதறி ஓடினர். ஓடியவர்களில் இருவர் மட்டும் காயங்களுடன் மீண்டும் படகில் ஏறிக்கொண்டனர். மிகுதி நான்கு பேரையும் காணவில்லை. படகிலிருந்து மற்றும் பத்துப்பேருடன் இவர்கள் இருவரையும் ஏற்றிக்கொண்டு ஒரு படகு தப்பிவந்துள்ளது. பொருள்களுடன் வந்த படகு ஒன்றும் கடலில் கைவிடப்பட்டுள்ளது. இப்படகின் ஓட்டுனர் தப்பிய படகில் ஏறிக் கொண்டதால் இவர் தப்ப முடிந்தது.

காணாமல்போன நான்கு பேர் படையினரது தாக்குதலினால் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது தப்பிவந்த படகும் படையினரது தாக்குதலால் சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (க). (பா)

### வீரச்சாவு

கொக்கட்டிச்சோலை, பழுகாமம் இராணுவ முகாம்களைச் சேர்ந்த இராணுவத்தினரும், ரெலோ குழுவினரும் அப்பகுதியையும் அதை அண்டியுள்ள கண்ணாகாடுகளையும் சுற்றி வளைத்து தாக்குதல் நடாத்தினர் இத்தாக்குதல் அதிகாலை 5 30 மணியளவில் நடாத்தப்பட்டது.

இத் தாக்குதலில் வீரவேங்கை சிவா (நாகமணி சிவச்சந்திரராஜா, கோட்டைக் கல்லாறு, கல்லாறு) வீரவேங்கை கிருபரதன் (கிருபாகரன்-கதிர்காமத்தம்பி சந்திரகுமார் கழுதாவளை மட்டுநகர்), ஆதரவாளர் தயாளன் ஆரையம்பதி ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
### 28-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 5895

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:
27-1141, 26-3530, 43-1019. 42-9112, 28-8444, 27-4920, 27-9404. 27-9489, 24-5127, 24-6161, 28-1308, 26-1728, 24-4875, 26-6026. 41-8292, 42-466, 27-7627, 24-4908, 28-1414, 24-3364.

வட பகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:-
24-5574. 24-7375, 42-728. 27-8959. 27-4435. 24-9609. 27-493, 27-6217 27-9729. 26-7667, 26-561, 28-1799, 24-6475. 27-5406, 27-8125, 42-3329, 24-5529, 26-5244, 24-4463, 27-1375, 27-8149